# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2066/2 - 2018 අප්‍රේල් මස 09 වැනි සඳුදා - 2018.04.09

2066/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இலக்கம் : 08/2018

திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018, ஏப்பிறல் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மரங்களைச் சீவுவதற்கான உரிமப்பத்திரக் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர,<br>
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,<br>
கொழும்பு 01,<br>
2018, ஏப்பிறல் 06.

**மரங்களை சீவுவதற்கான உரிமக் கட்டணம்**

| | கூட்டுறவு முறையின் கீழ் (ரூபா) | கூட்டுறவு முறையின் கீழ் அல்லாதவை (ரூபா) |
|---|---|---|
| I. ஆண் பனை (மரம் ஒன்றுக்கு) | 10.00 | 25.00 |
| II. பெண் பனை (மரம் ஒன்றுக்கு) | 25.00 | 50.00 |
| III. தென்னை (மரம் ஒன்றுக்கு) | 25.00 | 50.00 |

02.

I. பதனீரிற்காக தென்னை மர சீவலுக்கான குடிசைசார் உரிமம் (மரம் ஒன்றுக்கு) : ரூபா 50.00

II. பதனீரிற்காக தென்னை மர சீவலுக்கான வர்த்தக உரிமம் (மரம் ஒன்றுக்கு) : ரூபா 100.00

03. பொருட்கோடல் :

"கூட்டுறவு முறையின் கீழ்" என்பது, மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது கொத்தணி எனப் பொருள்படும்.

4- 855


1A - PG 3989 — 582 (2018/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.